செ.வெ. எண்.1105 நாள்:16.12.2010

# செய்தி வெளியீடு

## தமிழ்நாட்டில் வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் சிறப்பான செயல்பாட்டுக்கு மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்களிடம் உலக வங்கி குழுவினர் பாராட்டு

**தமிழ்நாட்டில் உலக வங்கி உதவியுடன் 2006–ஆம் ஆண்டு முதல் வாழ்ந்து காட்டுவோம் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன் மூலம் ஏழை எளிய மக்களுக்காக சுய உதவி குழுக்கள் அமைக்கப்பட்டு வாழ்வாதார மேம்பாட்டுக்கு பல்வேறு உதவிகள் அளிக்கப்படுகின்றன. நான்கு கட்டமாக செயல்படுத்தப்பட்டு வரும் இத்திட்டத்தில் முதல் கட்டமாக 16 மாவட்டங்களில் உள்ள மிகவும் பின்தங்கிய 70 வட்டாரங்களில் சுமார் ரூ.717 கோடி திட்ட மதிப்பீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதில் குறிப்பாக இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புக்கான பயிற்சி அளித்து வேலை வாய்ப்பு பெற்றுத் தருவது மற்றும் மாற்றுத் திறனாளிகள், நலிவுற்றோருக்கு சிறப்பு உதவிகள் அளிப்பது ஆகியவை முக்கியத் திட்டங்களாகும். இத்திட்டத்தின் செயல்பாடு குறித்து ஆய்வு செய்ய தமிழ்நாட்டிற்கு வந்துள்ள உலக வங்கி குழுவினர் மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களை இன்று (16.12.2010) அவரது அலுவலகத்தில் சந்தித்தார்கள். உலக வங்கி குழுவின் தலைவர் திருமதி நடாஷா ஹேவார்டு, திரு. கெவின்கிராக்போர்டு மற்றும் திருமதி.வரலஷ்மி வேமுரு ஆகியோர் இடம் பெற்றிருந்தனர்.**

**இந்த சந்திப்பின்போது, உலக வங்கிக் குழுவின் தலைவர் திருமதி. நடாஷா அவர்கள் உலக வங்கி உதவியோடு செயல்படுத்தும் பல்வேறு வாழ்வாதார திட்டங்களில் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படும் "வாழ்ந்து காட்டுவோம் திட்டம்" மிகச் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது என்று பாராட்டு தெரிவித்தார். மேலும், உலகின் பல்வேறு பகுதிகளிலும் உலக வங்கி செயல்படுத்தி வரும் அனைத்துத் திட்டங்களிலும் வாழ்ந்து காட்டுவோம் திட்டம் எல்லா இனங்களிலும் மிகச் சிறப்பாக செயல்படுத்தப்படும் திட்டம் என மதிப்பிடப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தவர், இதற்காக பெரும் முயற்சி எடுத்துக் கொண்ட மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும் மற்றும் அரசு அலுவலர்களுக்கும் பாராட்டுக்களை தெரிவித்துக் கொண்டார். இவ்வாறு சிறந்த செயல்பாட்டின் அடிப்படையில் ஏற்கனவே உலக வங்கியானது கூடுதலாக 50 வட்டாரங்களில் உள்ள 1661 ஊராட்சிகளில் இத்திட்டத்தை ரூ.950 கோடி மதிப்பீட்டில் விரிவுப்படுத்தவும் அனுமதி அளித்துள்ளது. இதற்கான ஒப்பந்தம் விரைவில் கையெழுத்தாக உள்ளது குறிப்பிடத்தக்கது.**

**இந்த சந்திப்பின்போது தமிழக அரசின் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை முதன்மைச் செயலாளர் திரு.கா.அலாவுதீன், இ.ஆ.ப. மற்றும் வாழ்ந்து காட்டுவோம் திட்ட இயக்குநர் திரு. தீரஜ்குமார், இ.ஆ.ப., ஆகியோர் உடனிருந்தனர்.**

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.**